www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi12T

04-01-2022

தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2023

வகுப்பு 12
பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

குறிப்பு: அ) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
ஆ) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: 14x1=14

1) "மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்குதற்கு" - கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்
1. பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
2. பொதிகையில் தோன்றியது
3. வள்ளல்களைத் தந்தது
அ) 1 மட்டும் சரி ஆ) 1, 2 இரண்டும் சரி
இ) 3 மட்டும் சரி ஈ) 1, 3 இரண்டும் சரி

2) அணியிலக்கணத்தை மட்டும் கூறும் நூல்
அ) தொல்காப்பியம் ஆ) மாறனலங்காரம்
இ) வீரசோழியம் ஈ) முத்துவீரியம்

3) வெள்ளச்சமவெளிகள் அழியககாரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

4) பொய்யா வானம் - இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல்தொடர்
இ) இடைச்சொல்தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

5) தமிழில் திணைப்பாகுபாடு ............ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

6) இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

7) கீழ்க்காணபவற்றுள் தவறானதைத் தேர்க.
அ) திருவளர் செல்வன் ஆ) திருவளர் செல்வி
இ) திருநிறை செல்வன் ஈ) திருநிறைச் செல்வி

8) கவடியோடு பொருந்த ஒன்றைத் தேர்க
அ) வசம்பு ஆ) கடுக்காய்
இ) மணத்தக்காளியிலைச் சாறு ஈ) மாவிலைக்கரி

9) 'காவினெம் கலனே; சுருக்கினம் கலப்பை' - இத்தொடரில் 'கலன்' என்பது உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

10) இந்தியாவில் ஏறக்குறைய ............ கி.மீ சாலைகள் உள்ளன.
அ) 50 இலட்சம் ஆ) 52 இலட்சம் இ) 55 இலட்சம் ஈ) 56 இலட்சம்

11) வளர்தலம் - இலக்கணக்குறிப்பு
அ) வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை

12) 'படிமம்' என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

13) தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடு

அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9

14) ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்று மயிலை சீனி-வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்துவமும் தமிழும்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக:** **3×2=6**

15) 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

16) மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது - எவற்றை?

17) வள்ளலார் யாருடைய உறவு பற்றாதிருக்க வேண்டும் என்கிறார்?

18) இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை எழுதுக:** **2×2=4**

19) பசுமைக்குடில் வாயுக்கள் எவை?

20) அக்காலத்துக் கல்விமுறையில் மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

21) 'பருவத்தே பயிர்செய்' நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22) **பொருள் வேறுபாடறிந்து தொடரமைக்க:**

கலை, களை

23) முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

24) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

நிலத்தக் கௌறுணும்டா அப்பதான் வகுறு நிறையும்.

25) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சியிலக்கணம் தருக:**

அ) பெருந்தேர் ஆ) எத்திசை

26) ஒருவிகற்பம், பலவிகற்பம் என்றால் என்ன?

27) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**

வெங்காயம்

28) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) அறுத்து ஆ) பொலிந்தான்

29) **பிழையை நீக்கி எழுதுக:**

அ) கோவலன் மதுரைக்குச் சென்றது.

ஆ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.

30) **அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தொடருக்கு ஏற்ப மாற்றுக:**

அ) கபிலர் திறமையானவர் என்று ............... (குமார்) தெரியும்.

ஆ) நம்முடைய ............ (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பொங்கும்.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை எழுதுக:** **2×4=8**

31) ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32) சினத்தால் வரும் கேட்டினை எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



33) அறிவின் மேன்மையைப் பற்றி திருக்குறள்வழி நீவிர் கருதுவன யாவை?

34) கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** **2×4=8**

35) பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் எழுதுக.

36) பேரிடர் மேலாண்மை - விளக்கம் தருக.

37) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

38) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக:** **3×4=12**

39) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

உடம்பாடு இலாதார் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன் உறைந்தற்று.

**- இப்பாடலில் பயின்று வரும் அணியை விளக்குக.**

40) **இலக்கிய நயம் பாராட்டுக:**

**(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)**

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளிப்
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க
உற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்துவிட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.

**- நாமக்கல் கவிஞர்**

41) **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:**

நிழலின் அருமை வெயிலில் தெரியும்

**(அல்லது)**

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

42) கூதிர்ப் பாசறை என்னும் துறையைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

43) **தமிழாக்கம் தருக:**

அ) Walls have ears.

ஆ) Many thanks for your message of greetings.

இ) If you want people to understand you, speak their language.

ஈ) Little brooks make great river.

44) **குறிப்பு: செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்று வினா.**

**பத்தியைப் படித்துப் புரிந்து வினாக்களுக்கு விடையளி:**

நகரங்கள் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவையாகும். சமூகத்தின் கடந்தகால வளர்ச்சிக்கும் நிகழ்கால வாழ்விற்கும் அவை நிற்கின்றன. தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என்றழைக்கப்படும் சென்னை தமிழகம் எங்கும் பரவி ஒன்றாகவும் தமிழகத்தின் தலைநகராகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும் வளர்ச்சியும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**வினாக்கள்:**

அ) பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானது எது?

ஆ) தென்னிந்தியாவின் நுழைவு வாயில் எது?

இ) நகரங்கள் சமூகத்தில் எவ்வாறு துணை நிற்கின்றன?

ஈ) நாம் அறிய வேண்டிய சிறப்புகள் யாவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **3×6=18**

45) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

**(அல்லது)**

எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறிஸ்தவக் கம்பரே' என்பதை நும்பாடப்பகுதி வழி நிறுவுக.

46) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**(அல்லது)**

திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

47) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க. **(அல்லது)**

சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

சிவக்குமார், மு, ஸ்ரீராம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வல்லம் 627809, தென்காசி மாவட்டம்.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

48) அ) 'விண்வேறு' எனத் தொடங்கும் 'இதில் வெற்றி பெற' பாடல்.

ஆ) 'அறிவு' என முடியும் திருக்குறள்.

---------

www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com